



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட **பொன்மொழிகள்**



அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு
ஓராண்டு சாதனையே சாட்சி

சிறப்பு வெளியீடு எண். 20

# தமிழரசு

பிப்ரவரி 2018

*வெளியிடுபவர் :*
**இயக்குநர்,**
**செய்தி–மக்கள் தொடர்புத்துறை,**
**சென்னை.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட **பொன்மொழிகள்**

# பொன்மொழிகள்

- மக்களின் எண்ணங்களை அறிந்து, கேட்காமலேயே செய்கின்ற அரசு அம்மா அரசு. சொன்ன திட்டங்களை மட்டுமல்ல, சொல்லாதத் திட்டங்களையும் நிறைவேற்றும் அம்மா அரசு.

- 110 விதியின்கீழ், அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும்; தமிழ்நாட்டு மக்களின் தலைவிதியையே மாற்றியது என்பதை யாராலும் மறக்கமுடியாது. மறுக்க முடியாது.

- ஏழை எளியோரின் தேவையறிந்து, அவர்களை மகிழ்விக்கின்ற அளவிற்குத் திட்டங்களை வகுக்கும் அரசு, அம்மாவின் அரசு.

- மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு நானும், அரசு அலுவலர்களும், மக்களோடு இணைந்து ஒருமித்து உழைத்து, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை ஈடேற்றுவோம்.

- அம்மா அவர்கள் சொன்னதையெல்லாம் செய்ததோடு, சொல்லாத பலவற்றையும் செய்து காட்டி, சாதனை படைத்த அரசு, இந்த அரசு.

- டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களால், மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பன்மடங்கு முன்னேறியுள்ளது.

- மீனவர்களுக்கு இயற்கை இடற்பாடுகளால், துயரம் ஏற்படும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய

அரசு விரைந்து உதவிக்கரம் நீட்டி, அரவணைத்து வந்துள்ளது என்றால், அது மிகையில்லை.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியே, மீனவர்களை பாதுகாப்பதில் இந்த

❖ அரசு எப்போதும், விழிப்புடனும்; விவேகத்துடனும்; செயல்படும் அரசு, இந்த அரசு.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குப்படியே இந்த ஆட்சிப் பொறுப்பினை நாங்கள் புனிதப் பணியாக ஏற்று செயல்படுவோம்.

❖ தமிழக அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி, மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும், பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் அரசு. இது அம்மாவின் அரசு.

❖ நான் முதலமைச்சராகப் பதவியேற்று கொண்ட அன்றே, மக்கள் பயன்பெறத்தக்க **5** திட்டங்களில் கையெழுத்திட்டேன்.

❖ இந்த அரசு உடனடித் திட்டங்களை தீட்டி, வறட்சியிலிருந்து மக்களை பாதுகாக்க நிவாரணங்களை விரைந்து வழங்கி வருகிறது.

❖ திட்டங்கள் அனைத்தும் ஏழை எளிய மக்களை மையமாக வைத்தே, இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

❖ அடுக்கடுக்கான திட்டங்கள் மிகக்குறுகிய காலத்திலேயே நிறைவு செய்யப்படுவதோடு, அதற்கான தொடக்க விழாக்களை, அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால், இந்த அம்மா அரசு பெற்றிருக்கிறது.

❖ அம்மாவின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஈடேற்றும் அரசாகவே இந்த அரசு செயல்படும்.

- இது மக்கள் அரசு, மக்களுக்காக பல்வேறு கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து, விரைந்து செயல்படும் அரசு.

- விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் எந்த ஒரு திட்டத்தினையும் நாங்கள் ஒருபோதும் அனுமதியோம் என்பதில் உறுதி கொண்டுள்ளோம்.

- இந்த அரசு பதவியேற்ற குறுகிய நாட்களிலேயே அடுக்கடுக்கான பல மக்கள் பணிகளைச் செய்து வரும் அரசு.

- மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மா அரசும், மீனவர்களுக்கு எப்போதும் உறுதுணையாகவும், நேசமாகவும், பாசமாகவும் என்றும் இருக்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

- அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசு, மகளிருக்கு ஏராளமான நலத் திட்டப் பணிகளை வழங்கிடக் காத்திருக்கிறது.

- மீனவர்களின் நலத்திலும்; வளத்திலும்; மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கொண்டிருந்த ஈடுபாட்டிலும்; அக்கறையிலும் எள்ளளவும் குறையாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு, மீனவர்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும், பாதுகாவலராக உறுதுணையாக இருக்கும் என, உறுதிபடக் கூறிக் கொள்கிறேன்.

- சில மனிதர்களோ, தங்களுடைய சுயநலத்தை கருத்தில் கொண்டு, தாங்கள் வந்த பாதையை மறந்து எங்கெங்கோ சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தன்னலம் கருதாமல், விசுவாசமாக இருந்தால், இறைவன் நம்மை உயர்த்துவார். நன்றி பாராட்டுவது, விசுவாசமாக இருப்பது, இறைவனையே அழைத்து வரும்''

- ‘அம்’ என்றால் தெய்வீகம், ‘மா’ என்றால் அளவில்லாத ... என்று பொருள். அளவிடற்கரிய தெய்வத்தன்மை பொருந்தி, உலகத் தமிழர்களின் உள்ளங்களில் சக்தியாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

- சிறுதொழில் துறைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நம் தமிழ்நாடு எய்திட, இலட்சியத்துடனும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் என, நான் உறுதியாக கூறுவதில், பெருமை கொள்கிறேன்.

- அம்மா எண்ணிய, விரும்பியத் திட்டங்களைச் செயல்படுத்துவதையே பெரும் பணியாகவும், பெருமையாகவும் நாங்கள் கருதுகிறோம்.

- தமிழ், தமிழர் என்று சொன்னவர்களெல்லாம் எதையும் செய்யவில்லை. சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பார்கள். அவர்கள் இதுவரை சொல்லிக் கொள்ளும்படியாக எதையாவது செய்திருக்கிறார்களா ?

- மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் புனிதமானவை; அவற்றை நிறைவேற்றுவது எனது தலையாய கடமை.

- ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது ஒன்றையே நோக்கமாக கொண்டு அரசியல் நடத்துவது மக்கள் விரோதச் செயலாகும்.

- இந்த அரசு மக்கள் அரசு! இந்த அரசு அம்மாவின் அரசு! விவேகத்துடன் விரைந்து செயல்படும் அரசு! உங்கள் நியாயமான பொது நல கோரிக்கைகளையே, திட்டங்களாக வடிவமைக்கிற அரசு! இந்த அரசு.

- உங்கள் அனைவரது சிந்தனையும், செயல்பாடும் ஒருங்கிணைந்து, ஒரே நோக்கத்திற்காக இருக்க வேண்டும்.

❖ அமைதி ஒன்று தான், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனித மேம்பாட்டிற்கும் காரணமாக விளங்குகிறது.

❖ இரவு பகல் பாராமல், லட்சியத்துடன் ஓய்வில்லாமல், பணியாற்றும் காவல் துறையினர், ஓய்வு பெற்ற பிறகு, அமைதியான சூழலில், மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், உருவாக்கப்பட்டதே ‘உங்கள் சொந்த இல்லம்’ திட்டம்.

❖ பயிற்சி தான் ஒரு மனிதனை பக்குவப்படுத்தும். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயிற்சி பெற்றால்தான், ஒருவர் தன்னுடையப் பணியினைத் திறமையாகவும், செம்மையாகவும் ஆற்றிட இயலும்.

❖ ஒழுக்கம் இருந்தால்தான், விருப்பு வெறுப்பு இன்றி; வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு இல்லாமல்; காவல் துறையினர் தங்கள் கடமைகளை ஆற்றிட முடியும்.

❖ மக்கள் இரவில் நிம்மதியாக தூங்கி எழ, தூங்காமல் விழித்திருந்து பாதுகாக்கும் தியாக உணர்வுமிக்கத் தாயைப்போல, மக்கள் மீது அன்பும், அக்கறையும் கொண்டு, உள்ளத்தைக் கவரும் நண்பனைப் போல, மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்கும் காவல் துறையினரான நீங்கள் தான், இந்த நாட்டின் அரிய சொத்துகளாக மதிக்கப் படுகிறீர்கள்.

❖ ஒரு பிரச்சினைக்கு உடல் வலிமையை கொண்டு தீர்வு காண்பதைவிட, அறிவுக்கூர்மையைக் கொண்டு தீர்வு காண்பதே சிறந்தது.

❖ நாட்டைப் பாதுகாப்பதில் ராணுவத்தினரின் பங்கு மகத்தானது, அதைப்போலவே, நாட்டுக்குள்ளே மக்களோடு மக்களாக, நல்லவர்களைப் போல வாழ்ந்து கொண்டு இருக்கின்ற தேச விரோதிகளையும், குற்றவாளிகளையும் கண்டறிவது என்பது, காவல்துறையினருக்கு பெரும் சவாலாகும்.

- ❖ இலக்குகள் நமது வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளைத் தருகின்றன. வெற்றி பெறுவதற்கான தொடங்குமிடமும் இதுவே. நீங்கள் அடைய வேண்டிய இலக்கினை நீங்களே நிர்ணயித்துக் கொண்டு, குறிக்கோளுடன் வாழுங்கள். சிறந்த காவல் அதிகாரிகள் என்ற நற்பெயரை பெறுவதொன்றையே இலட்சியமாகக் கொள்ளுங்கள்.

- ❖ மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்து, வாழ்வில் சமூக சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஆற்றல் மிக்கவர்களாக அவர்களை உருவாக்குவது, கல்வியே ஆகும்.

- ❖ ஒரு நாட்டின் வளர்ச்சியும்; பொருளாதார முன்னேற்றமும்; அந்த நாட்டு மக்களின் கல்வி நிலையையே அடிப்படையாகக் கொண்டவை.

- ❖ ஒரு நாட்டின் தலை எழுத்தானது, வகுப்பறைகளில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. உயிரும் உணர்வும் கொடுத்தவர்கள் பெற்றோர்களாக இருக்கலாம். ஆனால், இந்த வெளி உலகத்தைக் காண, சன்னல்களாகவும்; வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல ஏணிகளாகவும்; இருப்பவர்கள் நமது ஆசிரியர் பெருமக்களே.

- ❖ ஆசிரியர் தொழில் என்பது ஒரு சிற்பியின் தொழிலைப் போன்றது. மாணவர்களை அறிவுச் சிற்றுளியால் தெய்வப் பதுமையாக மாற்றும் புனிதப் பணி உங்களுடையது என்றால் அது மிகையில்லை.

- ❖ மாணவர்களை ஒழுங்குபடுத்தி, அவர்களை இந்நாட்டு மன்னர்களாக உருவாக்கும் சக்தி, ஆசிரியர்களான உங்களிடம் தான் இருக்கிறது.

- ❖ வருங்கால மன்னர்களாகிய மாணவச் செல்வங்களுக்கு கல்வியுடன், நற்சிந்தனை, ஒழுக்கம், பெரியோர் சொல் கேட்டு நடப்பது, போன்ற பண்புகளைக் கற்பித்து, அவர்களை நல்ல

குடிமக்களாக உருவாக்கும் பொறுப்பு, ஆசிரியர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அதனை உணர்ந்து நீங்கள் செயல்பட்டால், நம் நாடு ஒரு பெரிய வல்லரசு நாடாக மலரும் என்பதில் எள்ளவும் அய்யமில்லை.

❖ ஏழைகளின் வயிறு நிறைய வேண்டும், அதற்கான திட்டங்களே மற்ற எல்லா திட்டங்களை விட, நாட்டுக்கு மிக மிக அவசியமான திட்டம்.

❖ மிக அதிகமானவர்களுக்கு; மிக அதிக நன்மைகளைப் பயப்பதுதான்; உண்மையான மக்களாட்சி.

❖ அம்மா அவர்கள் வழியில் வந்த இந்த அரசில், அன்புக்கு பஞ்சமில்லை; அன்னத்திற்கும் பஞ்சமில்லை; ஏழைகளே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே, அம்மா அரசின் தலையாய குறிக்கோளாகும்.

❖ ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில் தான் உருவாக்கப்படுகிறது.

❖ ஏட்டுக் கல்வி மட்டும் ஒருவருடைய எதிர்காலத்தை நிர்ணயித்து விடாது, அவருடைய சமுதாயக் கல்வி தான் அவரை முழுமனிதனாக உருவாக்குகிறது.

❖ இந்த கணிணி யுகத்தின் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலும், அறிவு கூர்மையும் கொண்ட கல்வியையே, ஒவ்வொரு கல்வி நிறுவனமும் வழங்கிட முன்வர வேண்டும்.

❖ கல்வி என்பது தேர்வுக்காக மட்டும் இருக்கக் கூடாது, வாழ்க்கைக்கும் அது வழிகாட்டியாக அமைந்திட வேண்டும்.

❖ விருட்சமாக விரிந்து பரந்து வளர்ந்திருக்கிற உயர்ந்த மரத்திற்கு, வெளியில் தெரியாத வேர்களாக, தியாகத்தின் மறு உருவமாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே!

- ❖ பெற்றோர்களின் எண்ணம் ஈடேறும் வகையில், மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் கவனச் சிதறல் ஏற்படாத வகையில், கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி, வாழ்வில் நீங்கள் முன்னேற வேண்டும்.

- ❖ இளைஞர்களாகிய உங்களின் வாழ்க்கையினை ஒளிமயமாக்கிட, ஒரு தூண்டுகோல் தேவை. வாழ்க்கையின் முதல்படியில் கால் பதித்திடத் தூண்டுகோலாக இருப்பவர்களே ஆசிரியர்கள் தான்.

- ❖ பள்ளியில் மாணவர்களாக நுழையும் நீங்கள், கல்லூரியிலிருந்து மனிதர்களாக வெளியேறுகிறீர்கள். பள்ளிக்கல்வி உங்களுக்கு படிப்பை சொல்லித் தருகிறது. உயர்கல்விதான், உங்களைச் சிறப்புடன் வாழ, வழி அமைத்துத் தருகிறது.

- ❖ நாட்டை வளப்படுத்துவதிலும்; மக்களை மேம்படுத்துவதிலும்; அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும்; உயர்கல்வி பங்கு மகத்தானது; மாசற்றது.

- ❖ உழைப்பு, உழைப்பு, உழைப்பு. எங்கு உழைப்பு இருக்கின்றதோ, அங்கு உயர்வு நிச்சயம் கிட்டும்.

- ❖ இந்தியாவிற்கான எங்கள் தொலைநோக்குப் பார்வையானது, தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வைக்கு ஒத்ததாகவே உள்ளது.

- ❖ நம் நாடு, வளர்ச்சி மற்றும் பொருளாதார வெற்றியின் பலன்கள் அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து சமூக–பொருளாதார பிரிவினருக்கும் கிடைக்கும் வண்ணம், உயர் நடுத்தர பொருளாதார நிலையினை (Upper middle income) அடைந்திட வேண்டும்.

- ❖ அறிவார்ந்த மற்றும் திறமையான மனித வளங்களைக் கொண்ட உலக மையமாக, நம் இந்திய தேசம் திகழ்ந்திட வேண்டும்.

- எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும் என்றால், அந்த செயலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒருமித்த கருத்துடன் கூடிய ஒற்றுமை மிக மிக அவசியம்.

- எந்த அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ, அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள், கடவுளும் இருப்பார்.

- அம்மாவின் அரசு, மக்கள் பலத்தையும், கடவுளின் கருணையையும் பெற்று, சிறந்த அரசாகத் திகழ்கிறது என்பதில் நம் அனைவருக்கும் பெருமையே.

- தர்மத்தைப் பற்றிய பேசுகிறவர்கள் அதர்மத்தைச் செய்தால், மக்கள் கதாயுதம் வடிவத்தில் வந்து பாடம் கற்பிப்பார்கள்.

- இந்த உலகத்தில் கடுமையான உழைப்பாலும், அதனால் பெற்ற உயர்வாலும், கிடைத்த புகழ் மட்டுமே ! என்றைக்கும் நிலைக்கும், நீடிக்கும்.

- ஒருவர் பிறப்பார்; வாழ்வார்; இறப்பார்; இடைப்பட்ட காலத்திலே, மக்கள் மனதிலே யார் குடிகொண்டிருக்கிறார்களோ, அவர்கள் தான் சிறந்த தலைவர்கள்.

- மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு, இது உங்கள் அரசு, உங்கள் நலன் பேணும் அரசு.

- ஏழை, எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி, சுகாதார சேவைகளை, என்றென்றும் வழங்கப்பட வேண்டும் என்பதில், இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

- மக்கள் பணியே மகேசன் பணி. அம்மா வழியில் நாங்கள் ஒத்த கருத்தோடும், ஒருமித்த எண்ணத்தோடும் அயராது உழைப்போம்! மக்களின் மனங்களில் நிலைப்போம்!

❖ நட்பும்; நம்பிக்கையும் தான், எதிர்காலத்தில் பொது வாழ்க்கைக்கு என்றும் பலம்.

❖ நெருக்கடி வருகிறபோது உதவிக்கரம் நீட்டுகிறவர்களே, உண்மையான நண்பர்கள்.

❖ மனித வாழ்வுக்கேற்ற மகத்தானத் தத்துவங்களை, தனது பாடல்கள் வாயிலாக, வாரி வழங்கிய அவ்வையாரை தமிழ் மக்கள் இன்றளவும், அறிவுக் கடவுளாக வணங்குவதை நாம் பார்க்கின்றோம்.

❖ ‘அவ்வை’ என்பதற்கு ‘தாய்’ என்று பொருள். ஒரு தாயின் அறிவையும், அரவணைப்பையும், தன் பாடல்களின் வாயிலாக, உலகுக்குக் காட்டி, நம்மனைவரின் உள்ளங்களில் உயர்ந்து நிற்பவரே அவ்வையார்.

❖ கணவன் மனைவியிடையே இருக்கிற பிணக்குகளை தீர்த்து வைக்கிற அரு மருந்தே, அவ்வையின் பாடல்கள்.

❖ ஒரு வரியில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இனிமையான, எளிமையான பாமரருக்கும் விளங்கிடும் வகையில், பாடல்களை எழுதி, உலகில் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் – அவ்வையார் அவர்கள்.

❖ முதலமைச்சர் என்ற முறையிலே பல்வேறு துறைகளிலிருந்து வருகின்ற கோப்புகள் எல்லாம் உடனடியாக தீர்வு காணப்படுகின்ற காரணத்தினாலே, அந்தத் திட்டம் விரைந்து செயல்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து வருகின்றன.

❖ என் பதவியை, பணியாக மட்டுமே கருதி, எப்போதும் மக்களுக்காக பணியாற்றும் தொண்டனாகவே, நான் என்றும் இருந்திட விரும்புகின்றேன்.

❖ மக்களுக்கும் அரசுக்கும் நடுவில் பாலமாக இருந்து, மக்களின் கருத்துக்களை அரசுக்கும், அரசின் திட்டங்களை மக்களுக்கும் கொண்டு செல்லும் ஒரு தூதுவரைப் போல, செய்தித்துறை செயல்படுவது பெருமைக்குரியது.

❖ ஏழை எளிய, பாமர மக்களிடையே, அரசின் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அத்திட்டத்தின் முழுப் பலனும் பயனாளிகளுக்கு கிடைத்திட, செய்தித் துறையின் பங்கு மகத்தானது.

❖ அரசுப் பொருட்காட்சிகள் வாயிலாக, பொதுமக்கள் அனைத்து விவரங்களையும் நேரில் அறிந்து, உரிய பயன்களைப் பெறுகிறார்கள்.

❖ அனைத்துத் திட்டங்களும், சிறு வீடுகளில் வசிக்கும் கூலித் தொழிலாளிகளையும் சென்றடைகிறது என்றால், அதற்கு முழுக் காரணம் அரசு பொருட்காட்சிதான்.

❖ அம்மாவினுடைய ஆசியும், அம்மாவினுடைய அன்பினைப்போல, இன்றைக்கு மக்களுடைய அன்பும், இந்த ஆட்சிக்கு தொடர்ந்து இருக்கின்ற வரையில், எவராலும் இந்த அரசை அசைக்கவோ, ஆட்டவோ முடியாது.

❖ அரசு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதனை, அரசுப் பொருட்காட்சி மூலம், அந்தந்த துறை அரங்கத்தில் பார்த்து தெரிந்து கொள்ளும் அரிய வாய்ப்பினை செய்தித்துறை வழங்கிக் கொண்டிருக்கிறது.

❖ தமிழ்நாட்டின் விவசாயக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்கும், கிராமப்புறப் பெண்களுடைய வாழ்வின் மலர்ச்சிக்கும் செயல்படுத்தப்பட்டுள்ள தமிழக அரசின் திட்டங்களில், நபார்டு வங்கி ஆற்றியுள்ள சேவை பாராட்டுக்குரியது.

❖ விவசாயிகளையே முதலாளிகளாக மாற்றிடும் வகையில், விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்திக் கூட்டமைப்புகளை உருவாக்கி, அமைதியான ஒரு விவசாயப் புரட்சியை, நபார்டு வங்கி உதவியுடன், தமிழக அரசு செய்து வருகிறது.

❖ பெண்களின் முகங்களில் மலர்ச்சியையும், அவர்கள் வாழ்வில் வளர்ச்சியையும், சுயஉதவிக்குழுக்கள் ஏற்படுத்தி உள்ளது, என்றால் அது மிகையில்லை.

❖ எளிமைக்கும், உழைப்பிற்கும், தேசப்பற்றுக்கும் அடையாளமாக, திகழக்கூடியது கைத்தறியாகும்.

❖ படிக்கும் நூல் மனதுக்கு இதம் அளிக்கிறது, பருத்தி நூல் உடலுக்கு இதம்அளிக்கிறது, படிக்கும் நூல் அறிவுக்கு அழகு சேர்க்கிறது, பருத்தி நூல் உடலுக்கு அழகு சேர்க்கிறது. எழுத்தாளர்களும் நெசவாளர்களும் படைப்பாளர்கள்தான். எழுத்தாளர்கள் வார்த்தைகளை கோர்க்கின்றார்கள் நெசவாளர்கள் இழைகளைக் கோர்க்கின்றார்கள். எழுத்தாளர்கள் இந்த நாட்டுக்கு எத்தனை முக்கியமோ அதைப்போன்று நெசவாளர்கள் இந்த நாட்டுக்கு மிக மிக முக்கியம்.

❖ நாட்டின் வளர்ச்சி என்பது தனிமனிதன் முன்னேற்றத்தை அளவு கோலாகக் கொண்டது. சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கும் ஒரு தனிமனிதன் அடிப்படைத் தேவைகளான பொருளாதாரம், உணவு, கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், தொழில், வேலைவாய்ப்பு, பாதுகாப்பு போன்ற அனைத்தும் தங்கு தடையின்றிக் கிடைக்கிறதா ? என்பதை உறுதிப்படுத்துவதில் தான், சுதந்திரத்தின் வெற்றி இருக்கிறது.

❖ “அம்மா வழியில் ஆட்சி! அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி!” இதுவே எங்களின் தாரகமந்திரம். தடைகளைத் தகர்த்தெறிந்து

தமிழக மக்களுக்குச் சேவை ஆற்றுவது மட்டுமே எங்கள் இலக்கு.

❖ கல்வித்தரத்தைக் கொண்டுதான் ஒரு நாட்டின் முன்னேற்றம் கணக்கிடப்படுகின்றது.

❖ இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக தனது இன்னுயிரை துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம், நம் தமிழ்நாடு.

❖ வன்முறைகளுக்கு இடம் கொடாமல், அஹிம்சை மூலமே, அடிமை விலங்கை தகர்த் தெறிந்த தியாகச் செம்மல்கள் பலர் வலம் வந்த இடம் என்கிற பெருமையும் பெற்றது நம் தமிழகம் என்பதில் நாமனைவரும் பெருமை கொள்வோம்.

❖ நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தங்களின் சொந்த நலன்களைக் கிஞ்சித்தும் சிந்திக்காமல், நாட்டின் விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்த, தியாகச் செம்மல்கள் நிறைந்தது நம் தமிழ்நாடு.

❖ பெற்ற சுதந்திரத்தைப் பேணி காக்கவும், இந்தியத் திருநாட்டை வல்லரசாக்கவும், அதில் தமிழ்நாட்டை வளம் மிக்க மாநிலமாக உருவாக்கிட, இந்த அரசு தொடர்ந்து செயல்படும்.

❖ மக்கள்தான் இந்த நாட்டின் எஜமானர்கள். அவர்களுக்கு 24 மணிநேரமும் நீங்கள் பாதுகாப்பு அளியுங்கள். அந்த பாதுகாப்புதான், தமிழ்நாட்டை இன்று பல துறைகளிலும் முன்னேற்றி இருக்கிறது.

❖ அன்பு, ஒழுக்கம், நம்பிக்கை, தலைமைப் பண்பு, சமாதானம், ஒத்துழைப்பு, அனைவரையும் மதித்தல், உடல் நலம் பேணுதல் உள்ளிட்ட உயர்ந்த பண்புகளை இப்படிப் பட்டத் திறன் வளர்க்கும் போட்டிகள் மூலமே ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

❖ வெற்றி தோல்வி என்பதை சரி நிலையில் வைத்து பார்ப்பதுதான், ஒரு வீரனின் குணமாக இருக்க வேண்டும்.

❖ இரும்பு குளிர்ந்து போன பிறகு, அதனை எவ்வளவுதான் வலுவாக அடித்தாலும், அதலிருந்து புதியதாக எப்பொருளையும் உருவாக்கிட இயலாது. நெருப்பில் உருகி, இளகும் நிலையில் உள்ள இரும்பைத்தான், நாம் நினைத்தபடி மாற்றிட இயலும். அதுபோலவே, மாணவப் பருவத்தில், ஆசிரியர்கள், மாணவர்களை சிறந்த மாணக்கர்களாக உருவாக்கிடல் வேண்டும்.

❖ வகுப்பறையை கவித்துவமாய் மாற்றிடும் ஒவ்வொரு ஆசிரியரும், நல்லாசிரியர் மட்டுமல்ல; மாணவர்களின் “கனவு ஆசிரியர்” ஆகவும் மாறுவார் என்பதில் அய்யமில்லை.

❖ ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவிட வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவிட வேண்டுமானால், அந்நாட்டு மக்களின் மனங்களில் அமைதியும், ஆனந்தமும் நிலவிடல் வேண்டும்.

❖ அமைதியையும், ஆனந்தத்தையும் ஒருசேரக் கொடுப்பது கல்வி மட்டுமே. என்பதில் அய்யமில்லை.

❖ குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வியை, அதாவது “Inclusive Education”ஐ செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாகத் திகழ்வது அம்மாவின் அரசுக்குப் பெருமை.

❖ நீங்கள் சொல்வதே வேத வாக்கு என்று எண்ணி, இன்முகத்தோடு உங்களிடம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அந்த ஏதுமறியா இளம் சிறார்களின் புன்முறுவலில், புன்னகையில், இறைவன் இருக்கிறான் என்பதை, ஆசிரியர்களாகிய நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

- ‘‘ஆசிரியர் பணி’’ என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பதல்ல. ஒழுக்கத்தை; பண்பை; பொது அறிவை; ஆன்மீகத்தை; மாணவ மாணவியரிடையே எடுத்துச் சொல்லும் பணியே ஆசிரியர் பணி.

- எந்தவிதச் சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய திறமைகளை மாணவர்களிடத்திலே ஆசிரியர்களாகிய நீங்கள் உருவாக்கிட வேண்டும்.

- உங்களின் கடமையை, கண்ணியத்தோடும், சுயக்கட்டுப்பாட்டோடும், கருத்தோடும் செய்தால், மாணவர்களின் மனதில் நீங்கள் என்றென்றும் வாழும், ஒரு நல்ல ஆசிரியராக மாறுவீர்கள்.

- மக்களுடைய குறைகளைக் கனிவுடனும்; கவனத்துடனும்; பணிவுடனும்; பரிவுடனும் கேட்டு, நடுநிலையுடனும், நேர்மையாகவும் பணிபுரிய வேண்டும். இதுதான் காவல்களின் தலையாய கடமையாகும்.

- பணியில் சேரும் ஒவ்வொரு காவலரும், கடமையுணர்வுடனும், துணிவுடனும், சமயோசிதமாகச் செயல்பட்டு, நாட்டில் அமைதி நிலவிட அரும்பாடு பட வேண்டும்.

- நேரம் காலம் கடந்து பல தருணங்களில், பாடுபட்டு உழைத்திட வேண்டிய தன்னலமற்ற சேவையே காவல் சேவையாகும். அதனால் மக்களிடம் பெரும் அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை கண்முன்னே நிறுத்தி பார்க்கும்போது, உங்களுக்குள்ளே ஒரு பூரிப்பும், மிடுக்கும் நிச்சயம் ஏற்படும்.

- மக்களின் நாடி நரம்புகளைப் பிடித்துப் பார்த்து, அவர்களின் எண்ணங்களை சம்பந்தப் பட்டவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் ஒரு அமைப்பாகச் செயல்படுவது, பத்திரிகைத் துறை தான்.

- நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்கிட, அரசாங்கமும், பத்திரிகைத் துறையும் வண்டியின் இரு சங்கரங்கள் போல, இணைந்தே செயல்படல் வேண்டும்.

- மரம் தனக்காக பழம் தருவதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை; காற்று தனக்காக வீசுவதில்லை; சூரியன் தனக்கா ஒளி வீசுவதில்லை; மழை தனக்காக பொழிவதில்லை;

- ஞானிகளும் தனக்கா வாழ்வதில்லை; அதைப்போல, அனைத்து பத்திரிகைகளும் தன்னலம் கருதிடாமல், நடுநிலையுடன் செயல்பட வேண்டும்.

- இலக்கினை உறுதி செய். மனதினில் உறுதி கொள். விரும்பிய இலக்கினை நோக்கிய உனது பயணம் இனிதாகவே அமைந்திடும்.

- உன் இலக்கை நோக்கிப் பறந்து செல், பறக்க முடியவில்லை என்றால் ஓடு, ஓட முடியாவிட்டால் நடந்து செல், நடக்கவும் முடியாவிட்டால், தவழ்ந்து செல்.

- இலக்கினை நோக்கியப் பயணம் எத்தகையது என்பது முக்கியமல்ல, நீ, உன் இலக்கினை நோக்கி, இடையூறுகளைத் தகர்த்து, எப்படி முன்னேறிக் கொண்டு இருக்கிறாய் என்பதே முக்கியம்.

- அரசும், அதன் அங்கமாகிய ஆசிரியர்களுமே, உங்களுக்கு நல்லதொரு பாதையை மட்டுமே காட்டிட இயலும். ஆனால், நீங்கள்தான் அந்த பாதையில் எங்ஙனம்; எவ்வளவு தூரம்; செல்ல முடியுமென்பதை முடிவு செய்து முன்னேற, உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

- ‘‘மாற்றத்திற்கான தொடக்கமே, முன்னேற்றத்திற்கான அடையாளம்’’ என்பது திண்ணம்.

- ஆழ உழாத நிலமும், ஆழ்ந்து படிக்காத மனமும், ஆக்கம் பெறுவதில்லை. ஆகவே, எதையும் ஆழ்ந்து படிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறான ஆழ்ந்த கற்றலில் புரியாத புதிரும் எளிதாய் புரிந்திடும்.

- மூச்சு விடுபவன் – மனிதன், மூச்சை அடக்குபவன் – ஞானி, மூச்சே போகும் என்றாலும், முயற்சியை கைவிடாதவன் தான் – மாமனிதன். அத்தகைய மாமனிதனே உலகினை வெல்லப் பிறந்தவன்.

- மக்களின் நன்மைக்காக, தியாகங்கள் செய்வதும், மக்களுக்கு உதவி செய்வதில் உறுதி கொள்வதும், அவர்களின் மகிழ்ச்சியிலும், துயரத்திலும் பங்கு கொள்வது போன்ற பல கடமைகள் செவிலியர்களாகிய உங்களுக்குண்டு.

- மருத்துவத் துறையில், தன்னலமற்ற சேவை ஆற்றுவதும், தேவைப்படுவோருக்கு மருத்துவ உதவிகளை அளிப்பதும், செவிலியரான உங்களின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

- உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையினை மக்களுக்கு அளிக்கும் பொருட்டு, சுகாதார கட்டமைப்பினை வலுப்படுத்துதல், மருத்துவ மனித வளத்தை பெருக்குதல் போன்ற வைகளில் தனிக் கவனம் செலுத்தி வருவதன் பயனாக, இந்தியாவிலேயே, தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது.

- கொடை இல்லாத வாழ்வு வேரில்லாத மரம் போன்றது என்பதைப்போல, உடல் உறுப்பு தானம் மூலம், நமது உறுப்புகள் பிற உயிர்களில் வாழும்.

- நாம் மானிடப் பிறப்பு எடுத்ததன் பயனே, மற்றவர்களுக்கு உதவிடல் ஆகும். எல்லோரும் கொடையாளிகள் ஆகி விட்டால், இப்பூவுலகமே சொர்க்கலோகம் ஆகி விடும்.

❖ நம் தமிழ்நாடு சுகாதாரத் துறையில் தன்னிறைவு பெற்று, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும், முன்னோடி மாநிலமாகவும் திகழ்வது, நாமெல்லாம் பெருமைபடக் கூடியதாகும்.

❖ செவிலியர் பணி என்பது இறைவனால் வழங்கப்பட்ட அறப்பணி. இப்பணியில், மனம் கோணாது சேவையில் சிறந்து விளங்கம் செவிலியரைத் தாய்க்கும் நிகராக, மக்கள் மதித்துப் போற்றுவார்கள் என்பதில் அய்யமில்லை.

❖ கிராம சுகாதார செவிலியர்கள் அரசுக்கும் கிராம மக்களுக்கும் ஒரு பாலமாக செயல்படக்கூடியவர்கள். காவல் பணியிலும், கல்விப் பணியிலும் இருப்பவர்கள் ஒரு அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்றிட வேண்டும். அதையும் தாண்டி தியாக உணர்வோடும், சகிப்புத் தன்மையோடும், அன்புள்ளத்தோடும் செயலாற்றக் கூடியவர்களே, கிராம சுகாதார செவிலியர்கள் ஆவார்கள்.

❖ ஒரு நாடு முன்னேறியுள்ளது என்பதை, அந்த நாட்டின் சுகாதாரத்தை மையமாக வைத்துத்தான் அளவிடமுடியும்.

❖ நம் உயிருக்கு மேலான தமிழைத் தேன்தமிழே! செந்தமிழே! நற்றமிழே! முத்தமிழே! காப்பியத்தமிழே! கன்னித் தமிழே! பூந்தமிழே! என்று அழைப்பதைவிட, ‘தமிழே! தாய்த்தமிழே!’ என்று அழைப்பதில்தான் உணர்வு இருக்கிறது, அழகு இருக்கிறது.

❖ இனி எத்தனை காலமானலும், அம்மா’ என்கின்ற சொல்லால் மட்டுமே, தமிழையும்; தமிழரையும்; காக்கவும், வளர்க்கவும் முடியும்.

❖ தமிழ் மொழித் தமிழருக்கு அடையாளம் என்றால், திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது.

❖ தமிழை நேசித்தால், பிறந்த நாட்டையும், வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற பெற்றோரையும் நேசிப்பதற்கும், வணங்குவதற்கும் சமம்.

❖ ‘தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை, தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை’

❖ தமிழ் என்பது தமிழர்களின் அறிவு, பண்பாடு, வீரம், நாகரீகம், பழக்கவழக்கம் ஆகியன ஐந்தும் கலந்த ஒரு சுவைமிகு கூட்டுக் கலவை.

❖ மனிதர்கள் நம் செவியோடு பேசுகிறார்கள், நண்பர்கள் நம் உணர்வுகளோடு பேசுகிறார்கள், இறைவன் நம் ஆன்மாவோடு பேசுகிறார், புத்தகங்கள் மட்டும் தான் நம் மனதோடு பேசுகின்றன.

❖ எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி, அவர்களுக்குள்ளே தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில் தலை சிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிக்கப்படுகின்றன, போற்றப்படுகின்றன.

❖ பொருள்தேடி, கடல் கடந்து சென்று, குடியேறிய நாடுகளிலும், தமிழர்கள், தன் அடையாளத்தை; தன் பண்பாட்டை; மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வே அதற்குக் காரணம்.

❖ வழி காட்டும் ஒளி விளக்காய், ஒளியூட்டும் பெருவிளக்காய், பிணி நீக்கும் அரு மருந்தாய், உணர்வூட்டும் உயர்மருந்தாய், உலகத்தில் இணையின்றித் திகழ்வது திருக்குறளே!

❖ தமிழ்த்தாய்க்கு அணிகலன்களாக, சிலப்பதிகாரமும், சிந்தாமணியும், குண்டல கேசியும், வளையாபதியும் இன்னும் பல காப்பியங்களும். நீதி நூல்களும் அழகு சேர்த்தாலும், தன் கையில் திருக்குறளைச் செங்கோலாக வைத்துக் கொண்டுதான் தமிழ்த்தாய் உலகையே ஆட்சி செய்கிறாள்.

- நூலை வடிப்பதைவிட; நூலை படிப்பதை விட; ஒரு நூலாக வாழ்வதே சிறந்தது.

- ஒரு தனிமனிதன் எப்படி வாழவேண்டும்? ஒரு இல்லறம் எப்படி நடக்கவேண்டும்?ஒரு சமுதாயம் எப்படி இயங்க வேண்டும்? ஒரு மன்னன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும்?ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? என்று அத்தனை வழிமுறைகளும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது.

- வாழும் கலை முதல், ஆளும் கலை வரை கற்றுத் தரும் ஒரே நூல் திருக்குறள்.

- பூமிக்கு வந்த புண்ணியம்! ஏழைகளின் இல்லங்களில் விளக்கேற்றிய ஒளி விளக்கு! தாய்மையின் உறைவிடம்! தர்மத்தின் மறு உருவம்! உலக தமிழர்களின் காவலர் அன்னைத் தமிழ் பூமியில் உயர்ந்து நிற்கும் ‘அம்மா’!

❖ ❖ ❖

**எந்த அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ,**
**அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள்,**
**கடவுளும் இருப்பார்.**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள்